# குடியியலும் ஆட்சியும்

## 10-11 ஆந் தரங்கள்

# பாடத்திட்டம்

**(2007 ஆம் ஆண்டிலிருந்து 10-11 ஆந் தரங்களுக்காக)**

**சமூக விஞ்ஞானத்துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**
**2006**

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கற்பிக்கப்பட வேண்டிய தலைப்புகள் :

### தரம் 10 (பாடவேளைகள் 90)

1. சனநாயக ஆட்சி முறை
2. அதிகாரப் பரவலாக்கமும் அதிகாரப்பகிர்வும்
3. பல்கலாசார சமூகம்
4. சந்தைப் பொருளாதாரமும் பொருளாதாரத் தொடர்புகளும்
5. ஜனநாயக சமூகமொன்றில் முரண்பாடுகளுக்குத் தீர்வு காணல்

### தரம் 11 (பாடவேளைகள் 90)

6. சட்டமும் நீதியும்
7. அரசின் பல்வேறு நிலைகள்
8. மனித உரிமைகளும் கடமைகளும்
9. சூழல் பிரச்சினைகளும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியும்
10. சர்வதேச உறவுகள்


Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இலக்கு :

இலங்கையை விசேட இலக்காகக் கொண்டு அரசியல் மூலத்தத்துவங்களையும் பொருளாதாரச் செயற்பாடுகளையும் மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் இப்பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்கள் சமூகச் சூழலில் மனிதனின் ஆக்க பூர்வமான வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும், ஜனநாயக ரீதியில் வகை கூறும் வாழ்க்கை முறையின் முக்கியத்துவத்தை மதித்தல் வேண்டும்.

## நோக்கங்கள்

- அரசியல் எண்ணக்கருக்களையும் அவற்றின் நடைமுறைப்பயன்பாடுகளையும் விளங்கிக் கொள்ளல்
- அரசின் நோக்கங்களையும் அரசின் பல்வேறு துறைகளினதும் தொழிற்பாடுகளையும் விளங்கிக் கொள்ளல்
- பல்வேறுபட்ட அரசியல் கருத்துக்களையும் பரவலாக விமர்சனம் செய்யும் ஆற்றலையும் பெற்றுக் கொள்ளல்
- விமர்சித்தல், கணிப்பீடு செய்யும் ஆற்றல்களுடன் பொருளாதார மூலாதாரங்கள், பொருளாதாரக் கோட்பாடுகள் தொடர்பான அறிவையும் பெறல்
- பல்வேறு நிறுவனங்கள், தனிநபர்கள், அவர்களின் தேவைகள், தொழிற்பாடுகள், அதிகாரங்கள் தொடர்பான கணிப்பீட்டை மேற்கொள்ளல்

## முறையியல்

இப்பாடத்திட்டத்தில் மாணவர்களுக்கு அடிப்படைச் சித்தாந்தங்களை மட்டும் அறிமகப்படுத்தும் பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. இதில் வரலாற்று ரீதியான வளர்ச்சி உரிய முறையில் அறிமுகப்படுத்தப்படுவதுடன் ஒரு சில சித்தாந்தங்களை இலங்கையின் பொருத்தமான சந்தர்ப்பங்களில் மாணவர்கள் செயற்றிட்டத்தில் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படல் வேண்டும். பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயற்றிட்டம் மூலம் ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு அறிவதற்கு மாணவர்கள் வழிப்படுத்தப்படல் வேண்டும். கட்டமைப்புக்களையும் செயற்பாடுகளையும் வேறுபடுத்தி அறியும் திறனையும் அதனால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள், நுட்பங்களையும் விளங்கிக் கொள்ளும் ஆற்றலை விருத்தி செய்தல் வேண்டும். பிரசைகளுக்கு வகை கூறும் விதத்தில் அமைந்த சனநாயக ஆட்சி முறையின் முக்கியத்துவத்தை மதித்தல் வேண்டும்.



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# 10 ஆந் தரம்

## 1. சனநாயக ஆட்சி முறை (பாடவேளைகள் 30)

இங்கு சனநாயகத்தின் முக்கியத்துவம், அதன் பொருள் என்னும் சந்தர்ப்பங்களின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ள சனநாயக நிர்வாகக்கட்டமைப்பு, எண்ணக்கருக்களையும் மாணவர்கள் விளங்கிக் கொள்வதற்கு வழிப்படுத்தப்படல் வேண்டும்.

### தேர்ச்சி மட்டங்கள்

1. சனநாயகத்தின் இயல்புகள் மற்றும் அதன் வியாபகத்தன்மை பற்றிக் கற்றுக் கொள்வார்
2. சனநாயக ஆட்சி முறையின் பிரதான இயல்புகளைப் பகுப்பாய்வு செய்வார்
3. அரசு, அரசாங்கம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளையும் பிரசைகளினதும் அவர்களது பொறுப்புக்களையும் ஒப்பிடுவார்
4. சனநாயகத்தின் மகிமையை உள்வாங்கிக் கொள்வார்

### பாடஉள்ளடக்கம்

- சனநாயகம் எனும் எண்ணக்கருவை வரைவிலக்கணம் செய்தல்
- சனநாயக ஆட்சி முறையின் தோற்றம், வளர்ச்சி - நேரடி, பிரதிநிதித்துவ சனநாயக முறைகள்
- சனநாயக ஆட்சி முறையின் இயல்புகள் :
  - சர்வசன வாக்குரிமையின் அடிப்படையில் அரசாங்கத்தையும் ஆட்சியாளர்களையும் தெரிவு செய்தல்
  - போட்டித்தன்மை வாய்ந்த கட்சி முறை
  - சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்களும் தேர்தல் தொகுதி முறையும்
  - சுதந்திரமானதும் நியாயமானதுமான சனநாயக செயற்பாடுகளில் பங்குபற்றல்
  - அரசியலமைப்புக்கு ஏற்ப (யாப்பு) செயற்படல் (பெரும்பான்மையினரின் விருப்புக்கமைய)
  - ஊடகச் சுதந்திரமும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் உரிமையும்

மேற்குறிப்பிட்ட முறைகளுக்கு ஏற்ப பல்வேறு உதாரணங்களையும் அவற்றின் வெளியீடுகளையும் மாணவர்கள் கற்றல் வேண்டும்.

- அரசு, அரசாங்கம் என்பவற்றை வரைவிலக்கணம் செய்தல்
- அரசினதும் அரசாங்கத்தினதும் இயல்புகள்

(அ) அரசின் இயல்புகள் : தேசிய அரசுகளின் தன்மை, தேசிய அரசுகளின் தோற்றமும் ஆக்கச் செயற்பாடும் அரசுகளின் அடிப்படைக் கட்டமைப்புக்கள் - ஒற்றையாட்சி, சமஷ்டியாட்சி

(ஆ) அரசாங்கத்தின் பிரதான துறைகளும் அவற்றின் தொழிற்பாடுகளும் - சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

(இ) ஆட்சி முறைகள் : சட்டத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்டல், நலன்புரி சேவைகளை வழங்கல்

அபிவிருத்தித் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்

மேற்படி எண்ணக்கருகக்ளின் வரலாற்று ரீதியான வளர்ச்சியை அறிந்து கொள்ளச் செய்தலானது சமூக மாற்றங்கள் பற்றிய விளக்கத்தைப் பெறுவதற்கேயாகும். மேற்கூறிய அரசின் பொறுப்புக்களுடன் கூடிய செயற்பாடுகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கணிப்பிடப்பட்டு அவற்றின் முக்கயத்துவங்களை கலந்துலையாடுவதற்கு மாணவர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

சனநாயக ஆட்சியொன்றின் முக்கியத்துவம், ஆட்சியின் மாற்றுத் தாக்கங்கள், ஒத்த ஆட்சி முறைகள் பற்றி கேட்டறிதல், மேற்படி கருத்துக்கள் தொடர்பாகக்



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

கலந்துலையாடல், விவாதம் நடாத்துவதற்கு உணர்த்துவதோடு, இவை தொடர்பாக ஒப்பிட்டுக் கற்கைகளில் ஈடுபடும் வகையில் திட்மிடலினூடாக மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

## 2. அதிகாரப் பரவலாக்கமும் அதிகாரப் பகிர்வும் (பாடவேளைகள் 15)

இங்கு மாணவர்கள் ஒரு நாட்டின் ஆட்சியின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகவும் செயற்றிறன் மிக்க நிர்வாகமொன்றை வளர்ச்சியடையச் செய்வதை நோகக்மாகவும் கொண்டு அரசாங்கத்தின் கட்டமைப்பினை ஆய்வு செய்யும் ஆற்றலைப் பெறுவர்.

## தேர்ச்சி மட்டங்கள்

1. அதிகாரப் பரவலாக்கம், அதிகாரப் பகிர்வு எனும் எண்ணக்கருக்களுக்கிடையிலான வேறுபாடுகளை அறிந்து கொள்வார்
2. அதிகாரப் பரவலாக்கம் செய்யும் அதிகாரப் பகிர்வு அலகுகளின் தொழிற்பாடுகளை ஆராய்வார்
3. நவீன அரசொன்றின் கட்டமைப்பு ரீதஜியான மாற்றங்களை ஏற்படுத்துவதன் தேவையை மதிப்பிடுவார்

## பாடஉள்ளடக்கம்

- அதிகாரப் பரவலாக்கம், அதிகாரப் பகிர்வு எனும் எண்ணக்கருக்கள் பற்றிய அறிமுகம்
- இவ்வலகுகளின் கட்டமைப்பு, தொழிற்பாடுகள், அதிகாரங்கள் தொடர்பாக ஆராய்வதுடன் நவீன அரசுகளின் அதிகாரப் பகிர்வு, அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான உதாரணங்கள்.
- தெரிவு செய்யப்பட்ட உதாரணங்களில் அண்மைக்காலக் கட்டமைப்பு மாற்றங்கள் தொடர்பான விளக்கம் பெறல்
- இலங்கையின் அதிகாரப் பகிர்வு, அதிகாரப் பரவலாக்கம் பற்றிய வரலாறு

மாணவர்கள் நாடொன்றின் பல்வேறு மட்டங்களிலும் அரசாங்கத்தின் செயற்பாடுகள்தொடர்பகாக கலந்துரையாடுவதோடு, அத்தொழிற்பாடுகளை வினைத்திறனுள்ளதாக்குவதற்கு அதிகாரங்களையம் பொறுப்புக்களையும் பகிர்ந்தளிக்கும் முறைகள் பற்றியும் மதிப்பீடு செய்வதற்கு ஊக்குவிக்கப்படல் வேண்டும். இலங்கையின் அதிகாரப் பகிர்வு அல்லது அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான தர்க்கங்கள் சமூகத்தின் தேவைகளினடிப்படையில் எழ வேண்டும். இது தொடர்பான தற்கால கட்டமைப்புக்களின் விரிவாகன விளக்கம் 11 ஆந் தரத்தில் ஏற்படுத்தப்படவிருப்பதால் இங்கு வரலாற்றுப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படல் வேண்டும்.



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 3. பல்கலாசாரச் சமூகம் (பாடவேளைகள் 15)

இங்கு மாணவர்கள் பல்கலாசாரச்சமூகம் என்பதால் கருதப்படுவது என்ன என்பது பற்றியும் ஆத்துஜகுயு சமூகப் பிரசைகளின் உளநலன்களை எவ்வாறு அபிவிருத்தி செய்வது, அவ்வாறான சமூகமொன்று வளர்ச்சியடைய வேண்டிய முறைகள் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## தேர்ச்சி மட்டங்கள்

1. பல்கலாசார சமூகத்தின் இயல்புகளை விமர்சிப்பார்
2. பல்கலாசார சமூகத்தைக் கட்டியெழுப்புதலையும் அதன் அடிப்படைப் பண்புகளையும் மதிப்பீடு செய்வார்
3. பல்கலாசார சமூகமொன்றில் வாழ்வதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வார்

## பாடஉள்ளடக்கம்

- பல்கலாசார சமூகம் பற்றிய எண்ணக்கருவும் அதன் அடிப்படைப் பண்புகளின் அறிமுகம்
- பல்கலாசார சமூகமொன்றின் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்
- பல்கலாசார சமூகமும் நவீன அரசும்
- நல்லாட்சி ஒன்றிற்காக ஏனையோரின் அரசியல், சமூக, பொருளாதார கலாசாரத் தனித்துவங்களுக்கு மதிப்பளிப்பதன் முக்கியத்துவம்

மாணவர்கள் ஏனைய பல்கலாசார சமூகங்கள் தொடர்பாக உதாரணங்களை ஆராய்ந்து ஆக்கபூர்வமான பங்களிப்புடன் தேசிய இனத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பாக முக்கியத்துவம் கொடுத்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அத்தோடு வெற்றியளிக்காத கருத்துக்களை உதாரணங்களை வெற்றிகொள்வதற்கான கருத்துக்களை முன்வைத்தல் வேண்டும். பல்வேறு கருத்துக்களை வெளிக்கொணர்வதற்கான மேடை நாடகங்கள் மூலம் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 4. பொருளாதார முறைமைகளும் பொருளாதாரத் தொடர்புகளும் (பாடவேளைகள் 15)

இங்கு இலங்கை முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விசேட கவனஞ் செலுத்தி மாணவர்களுக்கு பொருளாதாரச் செயற்பாடுகளும் பொருளாதார அமைப்புக்களும் தொடர்பாக அடிப்படை அறிவை வழங்க வேண்டும்.

### தேர்ச்சி மட்டங்கள்

1. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளையும் பொருளாதார செயற்பாடுகளையும் மதிப்பீடு செய்வார்
2. பல்வேறு பொருளாதார முறைகளையும் நுணுகி ஆராய்வார்
3. அபிவிருத்திக்கு உதவும் தற்காலப் பொருளாதார முறை பற்றி விளங்கிக் கொள்வார்
4. இலங்கையில் உலகமயமாதலின் தாக்கங்களை மதிப்பீடு செய்வார்

### பாடஉள்ளடக்கம்

- அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை அறிந்து கொள்ளலும் பொருளாதார செயற்பாடுகளை வரைவிலக்கணம் செய்தலும்
- பல்வேறு பொருளாதார முறைகளையும் அறிந்து கொள்ளல்
  - முதலாளித்துவ, சமவுடமை, கலப்பு
- சந்தைப் பொருளாதார எண்ணக்கருவையும் அதன் பல்வேறு இயல்புகளையும் அறிந்து கொள்ளல்
- இலங்கையின் தற்காலப் பொருளாதார முறையும் அபிவிருத்தியும்
- தொழிநுட்ப வளர்ச்சியும் உலகப் பொருளாதாரத்தில் உகல மயமாயமாதல் செயற்பாடுகளும் இலங்கையில் ஏற்படுத்தும் தாக்கங்கள், பொருளாதார முறைகளைத் திறனாய்வு செய்ய உதவும் சமூக, பொருளாதார குறிபாட்டிகள் தொடர்பான விளக்கம் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஏனைய நாடுகள் தொடர்பான சுய கற்றலில் ஈடுபடுத்தப்படல் வேண்டும்.



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 5. சனநாயக சமூகமொன்றில் மோதல்களைத் தவிர்த்தல் (பாடவேளைகள் 15)

இங்கு சமூகங்களில் தோன்றக் கூடிய மோதல்களையும் அவற்றைச் சமாதானமான முறையில் தீர்த்துக் கொள்ளல் தொடர்பான அறிவையும் பெற்றுக் கொள்வர்

## தேர்ச்சி மட்டங்கள்

1. பல்வேறு விதமான மேபாதல்களையும் விளங்கிக் கொள்வார்
2. மோதல்களைத் தவிர்ப்பதற்கான சாத்தியமான அணுகுமுறைகளை ஆராய்வார்
3. சனநாயக சமூகமொன்றில் மோதல்களைத் தவிர்க்க வேண்டியதன் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்வார்

## பாடஉள்ளடக்கம்

- முரண்பாடுகளின் அறிமுகம்
- மோதல்களின் வகையும் மோதல்கள் தோன்றுவதற்கான மூலாதாரங்களும்
  மோதல்களின் வகை : அரசியல், சமூக, பொருளாதார, இன மோதல்கள்
- மோதல் தவிர்ப்பின் பல்வேறு முறைகள்
- மோதல் தவிர்ப்பதாலும் சமாதானமான முறையில் தீர்த்துக் கொள்வதாலும் ஏற்படும் நன்மைகள்

இலங்கையின் நிலையை ஒப்பீட்டு ரீதியாக விளங்கிக் கொள்வதற்கு குறைந்த பட்சம் இரு முரண்பாட்டுச் சந்தர்ப்பங்கள் தொடர்பான நிகழ்வுகளையேனும் கற்று விளங்க வேண்டும். சாத்தியமான முரண்பாட்டுத் தீர்வுகளையும் அதே போல் அசாத்தியமான தீர்வு தொடர்பாக சாத்தியக்கூறுகளையும் சாத்தய்மற்றவைகளையும் விளங்கிக் கொண்டு இலகுபடுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.